HSBC Bank (Singapore) Limited-இன் ஆண்டு அறிக்கை 2022

31 டிசம்பர் 2022-இல் முடிந்த நிதியாண்டின் இலாபம் மற்றும் இழப்பு அறிக்கை

	2022 S$'000	2021 S$'000
வட்டி வரவு	**560,860**	287,192
வட்டிச் செலவு	**(99,397)**	(37,001)
நிகர வட்டி வரவு	**461,463**	250,191
கட்டண மற்றும் தரகு வரவு	**154,448**	150,526
கட்டண மற்றும் தரகுச் செலவு	**(59,554)**	(37,651)
நிகர கட்டண வரவு	**94,894**	112,875
நிகர வர்த்தக வரவு	**56,489**	43,217
மற்ற வரவு	**9,838**	11,201
மொத்த இயக்கு வரவு	**622,684**	417,484
செலவுகள்:		
- ஊழியர் கட்டணங்கள்	**(144,527)**	(126,977)
- உடைமை, இயந்திரகம் மற்றும் இயந்திரத்தின் மதிப்பிறக்கம்	**(10,154)**	(8,776)
- புலனாகாதச் சொத்துக்களின் மதிப்பிறக்கம்	**(67)**	(852)
- மற்ற இயக்குச் செலவுகள்	**(246,318)**	(232,315)
நிகர இயக்குச் செலவுகள்	**(401,066)**	(368,920)
கடன் மதிப்புக்குன்றுதல் இழப்புக்கள் மற்றும் வாராக் கடன்களுக்கு முந்திய இயக்கு இலாபம்	**221,618**	48,564
எதிர்பார்த்த கடன் நஷ்டங்கள் மற்றும் பிற கடன் சேதார கட்டணங்களின் மாறுதல்	**(5,469)**	6,264
வரிக்குமுன் இலாபம்	**216,149**	54,828
வரிச் செலவு	**(38,490)**	(8,650)
ஆண்டுக்குரிய இலாபம்	**177,659**	46,178

31 டிசம்பர் 2022 நிலவரப்படி நிதிநிலை இருப்பு அறிக்கை

	2022 S$'000	2021 S$'000
சொத்துக்கள்		
மத்திய வங்கிகளில் இருப்புத் தொகை	**145,768**	321,276
சிங்கப்பூர் அரசாங்கக் கருவூல உண்டியல்கள் மற்றும் பத்திரங்கள்	**3,161,096**	2,811,628
மற்ற அரசாங்கக் கருவூல உண்டியல்கள் மற்றும் பத்திரங்கள்	**458,146**	282,491
சார்பியச் சொத்துக்கள்	**7,390**	10,910
வங்கிகளில் உள்ள நிலுவைகளும் வைப்புகளும், மற்றும் வங்கிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள்	**166,147**	168,360
வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களும் முன்பணங்களும்	**14,506,961**	14,721,958
நேரடி உடைமை நிறுவனத்திடமிருந்து வரவேண்டியவை	**27,071**	33,085
சம்பந்தப்பட்ட பெருநிறுவனங்களிடமிருந்து வரவேண்டியவை	**9,966,742**	8,933,159
மற்ற சொத்துக்கள்	**626,396**	273,788
கூட்டு முயற்சியில் முதலீடு	**3,409**	—
ஒத்திவைக்கப்பட்ட வரி	**3,806**	—
உடைமை, இயந்திரகம் மற்றும் இயந்திரம்	**104,764**	105,664
புலனாகாதச் சொத்துக்கள்	**1,443**	1,513
மொத்த சொத்துக்கள்	**29,179,139**	27,663,832
கடன் பொறுப்புகள்		
சார்பியக் கடன் பொறுப்புகள்	**16,007**	35,542
வங்கிகளின் வைப்புத்தொகைகள் மற்றும் இருப்புகள்	**43,308**	22,851
வங்கி-அல்லாத வாடிக்கையாளர்களின் வைப்புத்தொகைகள்	**26,080,844**	25,552,269
நேரடி உடைமை நிறுவனத்திற்குச் சேர வேண்டியவை	**19,620**	12,192
சம்பந்தப்பட்ட பெருநிறுவனங்களுக்குச் சேர வேண்டியவை	**771,324**	88,346
மற்றக் கடன் பொறுப்புகள்	**373,511**	189,154
நடப்பு வரி கடன் பொறுப்புகள்	**39,819**	11,604
ஒத்திவைக்கப்பட்ட வரி	**—**	829
மொத்தக் கடன் பொறுப்புகள்	**27,344,433**	25,912,787
நிகர சொத்துக்கள்	**1,834,706**	1,751,045
சொத்து மதிப்பு		
பங்கு மூலதனம்	**1,530,000**	1,530,000
காப்பு இருப்புகள்	**49,828**	65,412
திரட்டப்பட்ட இலாபங்கள்	**254,878**	155,633
மொத்தச் சொத்து மதிப்பு	**1,834,706**	1,751,045

மூலதனம் போதிய விகிதங்கள்

டிசம்பர் 31-இல் சிங்கப்பூரில் இணைக்கப்பட்ட வங்கிகளுக்கான இடர் அடிப்படையிலான மூலதனம் போதிய தேவைகளைக் குறித்த MAS அறிவிப்பு 637-இல் வரையறுக்கப்பட்டுள்ள மூலதனம் போதிய விகிதங்கள் மற்றும் கூறுகள்:

	2022 S$'000	2021 S$'000
இடர் நிறையிடப்பட்ட சொத்துக்கள்		
கடன் அபாயம்	**9,034,838**	8,949,562
எதிர் கட்சி கடன் அபாயம்	**18,162**	22,767
சந்தை அபாயம்	**8,018**	50,915
செயல்பாட்டு அபாயம்	**914,684**	925,328
	9,975,702	9,948,572

	2022 S$'000	2021 S$'000
மூலதன கூறுகள்		
அடுக்கு 1 மூலதனம்	**1,611,378**	1,636,971
அடுக்கு 2 மூலதனம்	**187,397**	35,836

	2022 %	2021 %
மூலதன விகிதங்கள்		
பொதுவான சொத்து மதிப்பு அடுக்கு 1 விகிதம்	**16.14%**	16.46%
அடுக்கு 1 விகிதம்	**16.14%**	16.46%
மொத்த மூலதன விகிதம்	**18.03%**	16.82%

இயக்குநர்கள்

இந்த அறிக்கையின் தேதியில் அலுவலகத்தில் உள்ள நிறுவனத்தின் இயக்குநர்கள் பின்வருமாறு:

Lee Yoke Sim Penny
Wong Kee Joo
Tay Cheng Kim Karen
Ngan Wan Sing Winston
Edward Michael Flanders (19 ஏப்ரல் 2022 அன்று நியமிக்கப்பட்டார்)

HSBC Bank (Singapore) Limited நிறுவனத்தின் உறுப்பினர்களுக்கான சார்பற்ற கணக்காய்வாளரின் அறிக்கை

நிதிநிலை அறிக்கைகளுக்கான கணக்காய்வு பற்றிய அறிக்கை

எங்கள் அபிப்பிராயம்

எங்கள் அபிப்பிராயப்படி, இதனுடன் கூடிய HSBC Bank (Singapore) Limited-இன் ('நிறுவனம்') நிதிநிலை அறிக்கைகள், நிறுவனச் சட்டம் 1967 ('சட்டம்') வழங்கும் விதிகளுக்கும், சிங்கப்பூர் நிதிநிலை அறிக்கை வரையறைகளுக்கும் ('FRS') இணங்க 31 டிசம்பர் 2022 நிலவரப்படி நிறுவனத்தின் நிதி இருப்பு, நிதியியல் செயல்பாடு, சொத்து மதிப்பு மாற்றங்கள் மற்றும் நிறுவனத்தின் பணப்புழக்கங்கள் ஆகியவை உண்மையான மற்றும் நியாயமான கருத்தைத் தரும் வகையில் அந்த தேதியில் முடிவுற்ற ஆண்டிற்கு முறையாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

நாங்கள் கணக்காய்வு செய்துள்ளவை

நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகளில் உள்ளடங்கியவை:
- 31 டிசம்பர் 2022-இல் முடிந்த ஆண்டிற்கான விரிவான வரவு அறிக்கை;
- 31 டிசம்பர் 2022 நிலவரப்படி நிதி இருப்பு அறிக்கை;
- 31 டிசம்பர் 2022-இல் முடிந்த ஆண்டிற்கான சொத்து மதிப்பு மாற்றங்களின் அறிக்கை;
- 31 டிசம்பர் 2022-இல் முடிந்த ஆண்டிற்கான பணப்புழக்க அறிக்கை; மற்றும்
- முக்கியமான கணக்கியல் கொள்கைகளின் சுருக்கம் உட்பட, நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள்.

அபிப்பிராயத்தின் அடிப்படை

நாங்கள் எங்கள் கணக்காய்வை சிங்கப்பூர் தணிக்கை வரையறைகளுக்கு ('SSA') இணங்கச் செய்துள்ளோம். இந்த வரையறைகளின் கீழ் எங்களுக்கு உள்ள பொறுப்புகள் அனைத்தும் நிதிநிலை அறிக்கைகளின் 'கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள்' எனும் பகுதியில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளன.

நாங்கள் பெற்ற கணக்காய்வு சான்றுகள் போதுமானவை என்றும் எங்கள் கருத்துக்கு அடிப்படை வழங்கப் போதுமானவை என்றும் நாங்கள் நம்புகிறோம்.

சார்பற்றமை

எங்களது நிறுவனம், பொது கணக்காளர்கள் மற்றும் கணக்கியல் நிறுவனங்களுக்கான கணக்கியல் மற்றும் நிறுவன ஒழுங்குமுறை ஆணைய தொழில்முறை நடத்தை மற்றும் நெறிமுறைகள் ('ACRA விதிகள்') மற்றும் சிங்கப்பூரில் நிதிநிலை அறிக்கைகளைக் கணக்காய்வு செய்வதற்கான நன்னெறித் தேவைகளின் அடிப்படையின் கீழ் இந்நிறுவனத்துடன் சார்பில்லாத நிறுவனம் ஆகும். நாங்கள் இந்தத் தேவைகள் மற்றும் ACRA விதிகளுக்கு இணங்க எங்களுடைய நன்னெறி பொறுப்புகளை முழு நிறைவு செய்திருக்கிறோம்.

மற்றத் தகவல்

மற்றத் தகவல்கள் நிர்வாகத்தின் பொறுப்பாகும். மற்றத் தகவல்களில் இயக்குநரின் அறிக்கை மற்றும் MAS 608 துணைத் தகவல் ஆகியவை உள்ளடங்கும். ஆனால் நிதிநிலை அறிக்கை மற்றும் எங்கள் கணக்காய்வாளரின் அறிக்கை இதில் அடங்காது.

நிதிநிலை அறிக்கைகள் பற்றிய எங்கள் அபிப்பிராயம் மற்றத் தகவல்களுக்குப் பொருந்தாது. நாங்கள் அதற்கு எந்தவகையான உறுதி முடிவும் தெரிவிக்கவில்லை.

நிதிநிலை அறிக்கைகளின் கணக்காய்வின் மீதான எங்கள் பொறுப்பு என்பது மற்றத் தகவல்களை வாசித்து, அவ்வாறு வாசிக்கும்போது, அத்தகவல்கள், பொருளாதார ரீதியாக நிதிநிலை அறிக்கைகளுடன் அல்லது கணக்காய்வில் எங்களுக்குக் கிட்டிய அறிவுடன் சீரற்று உள்ளதா எனப் பரிசீலிப்பதும், அல்லது வேறுவகையில் பொருளாதார ரீதியாகத் தவறாக உள்ளதா எனப் பரிசீலிப்பதும் ஆகும். நாங்கள் நிகழ்த்தியுள்ள வேலையின் அடிப்படையில், இந்த மற்றத் தகவல்களில் பொருள் தவறாக உள்ளது என்று முடிவெடுத்தால், நாங்கள் இந்த உண்மையை அறிவிக்க வேண்டும். இது தொடர்பாக நாங்கள் அறிவிக்க எதுவும் இல்லை.

நிர்வாகம் மற்றும் இயக்குநர்களுக்கு நிதிநிலை அறிக்கைகளின் மீதானப் பொறுப்புகள்

நிறுவனச் சட்ட விதிகள் மற்றும் FRS-களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நோக்கை வழங்கும் நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பது, சொத்துக்களை அங்கீகரிக்கப்படாதப் பயன்பாடு அல்லது உரிமை மாற்றுதல் ஆகியவற்றுக்கு எதிராகப் பாதுகாக்கப்பட்டுள்ளதற்கான நியாயமான உறுதி வழங்குவதற்குப் போதுமான உள் கணக்கு வைப்புக் கட்டுப்பாடுகள் அமைப்பு ஒன்றை ஏற்படுத்திப் பராமரிப்பது, உண்மையான மற்றும் நியாயமான முறையில் நிதிநிலை அறிக்கைகள் தயாரிப்பதற்கும் சொத்துக்களின் பொறுப்புகளைப் பராமரிப்பதற்கும் அத்தியாவசியமாகிய பணப்பரிமாற்றங்களை முறையாக அங்கீகரிப்பது, அவற்றைப் பதிவுசெய்வது ஆகியவை நிர்வாகத்தின் பொறுப்புகளாகும்.

நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்கையில், தொடர்ந்து இயங்கும் நிறுவனமாகத் தொடர்வதற்கான நிறுவனத்தின் ஆற்றலை மதிப்பிடல் செய்வதும் நிர்வாகத்தின் பொறுப்பாகும். அவ்வாறு செய்கையில் தொடர்ந்து இயங்கும் நிறுவனம் தொடர்பான விடயங்களை வெளிப்படுத்துதலும், நிறுவனத்துக்கான கணக்கியல் அடிப்படையில் பயன்படுத்துதலும் நிர்வாகத்தின் பொறுப்பாகும். ஆனால், ஒரு வேளை அந்நிறுவனம் தனது இயக்கத்தை நிறுத்தவோ அல்லது கலைக்கவோ அல்லது அவ்வாறு செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற சூழ்நிலையில் இவ்விதிமுறை பயன்படாது.

நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கையிடல் முறைகளை மேற்பார்வையிடுவது இயக்குநர்களின் பொறுப்புகளில் உள்ளடங்கும்.

நிதிநிலை அறிக்கைகளைக் கணக்காய்வு செய்வதன் மீதான கணக்காய்வாளருக்கு உள்ள பொறுப்புகள்

தயாரிக்கப்படும் நிதிநிலை அறிக்கைகள், மோசடி, அல்லது பிழை மற்றும் தவறாகப் புரிந்துகொள்ளப்படுவதிலிருந்து விடுபட்டுள்ளன என்பதனை உறுதி செய்வதுடன் கணக்காய்வாளரின் அறிக்கை மற்றும் எங்கள் கருத்தை உள்ளடக்கிய ஒரு தணிக்கையாளரின் அறிக்கையை வெளியிடுவதும் எங்கள் நோக்கங்கள் ஆகும். நியாயமான உறுதி என்பது ஒரு உயர் மட்ட உறுதியாகும், ஆனால் SSA-க்கு இணங்கச் செய்யப்பட்ட கணக்காய்வு பொருளாதார ரீதியான தவறுகள் ஏதேனும் இருப்பின் அதனை எப்போதும் கண்டறியும் என்பது உறுதி கிடையாது. மோசடி அல்லது பிழை மூலமாக ஏற்படும் தவறுடன் கூடிய அறிக்கைகள், தனித்தனியாகவோ அல்லது ஒரு தொகுப்பாகவோ, இந்த நிதிநிலை அறிக்கைகளை அடிப்படையாக வைத்துப் பயனர்கள் எடுக்கும் முடிவுகளில் நியாயமான அளவில் தாக்கங்களை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கும் பட்சத்தில் அவை பொருளாதார ரீதியான தவறுகள் எனக் கருதப்படும்.

SSA-க்கு இணங்க நாங்கள் செய்த ஆய்வின் ஒரு பகுதியாக, இந்த கணக்காய்வு முழுவதும் தொழில்முறை நியாயத்தீர்ப்பைக் கையாண்டதுடன் தொழில்முறை ஐயுறவையும் பேணி வந்தோம். மேலும் நாங்கள்:
- மோசடி அல்லது பிழையால் நிதி அறிக்கைகளில் விவரப்பிழைகள் நேரக்கூடிய அபாயத்தை அடையாளம் கண்டு மதிப்பிட்டு, இந்த இடர்களுக்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை மேற்கொண்டு, எங்கள் கருத்துக்கு அடிப்படை வழங்குவதற்குப் போதுமான பொருத்தமான கணக்காய்வு ஆதாரங்களைப் பெறுவோம். பிழையால் நேரும் விவரப்பிழையை விட மோசடியால் நேரும் விவரப்பிழையை அடையாளம் காணாதிருக்கக்கூடிய அபாயம் அதிகம். ஏனெனில் மோசடியில் கூட்டுச்சதி, ஏமாற்று, வேண்டுமென்றே செய்யப்பட்ட விடுபாடுகள், பிறழ் கூற்று அல்லது உள் கட்டுப்பாடு மீறல் ஆகியவை இருக்கக்கூடும்.
- சூழலுக்கு ஏற்றவாறு கணக்காய்வு முறைகளை வடிவமைப்பதற்காக, கணக்காய்வு தொடர்புடைய உட்கட்டுப்பாடு பற்றி புரிந்துக்கொள்வோம், ஆனால் இது நிறுவனத்தின் உட்கட்டுப்பாட்டின் செயல்திறனைப் பற்றி அபிப்பிராயம் வெளிப்படுத்தும் நோக்கத்துக்காக அல்ல.
- பயன்படுத்தப்படும் கணக்கியல் கொள்கைகளின் பொருத்தத்தையும் நிர்வாகத்தால் செய்யப்பட்டுள்ள கணக்கியல் கொள்கைகள் மற்றும் தொடர்புடைய வெளிப்பாடுகள் ஆகியவற்றின் நியாயத்தன்மையையும் மதிப்பாய்வு செய்வோம்.
- நடைபெற்றிருக்கும் நிகழ்வுகள் தொடர்பில் ஒரு பொருளாதார உறுதியற்ற நிலை இந்நிறுவனத்திற்கு இருந்தாலோ அல்லது தொடர்ந்து இயங்கும் நிறுவனமாக இயங்குவதற்கு வேண்டிய இந்நிறுவனத்தின் திறனில் குறைபாடு இருந்தாலோ, பெறப்பட்ட கணக்காய்வு ஆதாரத்தின் அடிப்படையில் தொடர்ந்து இயங்கும் நிறுவனம் என்ற அடிப்படையிலான கணக்கியலை நிர்வாகம் பயன்படுத்தியுள்ளதன் பொருத்தத்தைப் பற்றி முடிவு செய்யவேண்டும். பொருளாதார உறுதியற்ற தன்மை இருப்பதாக நாங்கள் முடிவு செய்தால், நாங்கள் எங்கள் கணக்காய்வு அறிக்கையின் நிதிநிலை அறிக்கைகளில் உள்ள தொடர்புடைய வெளிப்பாடுகளில் கவனத்தை ஈர்க்க வேண்டும் அல்லது, அத்தகைய வெளிப்பாடுகள் போதுமானதாக இல்லாத பட்சத்தில் எங்கள் அபிப்பிராயத்தை மாற்ற வேண்டும். எங்கள் முடிவுகள் அனைத்தும் இக்கணக்காய்வு அறிக்கையின் தேதி வரையில் பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினை அடிப்படையாகக் கொண்டவை. இருப்பினும், வருங்காலத்தில் ஏற்படும் நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் இந்நிறுவனத்தைத் தொடர்ந்து இயங்க முடியாமல் நிறுத்தலாம்.
- வெளிப்பாடுகள் உள்ளிட்ட நிதிநிலை அறிக்கையின் உள்ளடக்கம், அமைப்பு மற்றும் ஒட்டுமொத்த காட்சியளிப்பை மதிப்பிடுதல் மற்றும் நிதிநிலை அறிக்கைகள் அடிப்படைப் பரிவர்த்தனைகளையும் நிகழ்வுகளையும் நியாயமான காட்சியளிப்புக்கு ஏற்ற முறையில் குறிக்கின்றனவா என மதிப்பிடுவோம்.

நாங்கள் இயக்குநர்களுடன் மற்ற விடயங்களோடு, கணக்காய்வுக்குத் திட்டமிடப்பட்டுள்ள செயற்பரப்பு மற்றும் காலம் இவற்றுடன் எங்கள் கணக்காய்வின் போது நாங்கள் அடையாளம் கண்ட உட்கட்டுப்பாடுகளில் உள்ள ஏதேனும் முக்கிய குறைபாடுகள் உள்ளிட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள் ஆகியன தொடர்பாகத் தொடர்புகொள்கிறோம்.

மற்ற சட்டம் மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் பற்றிய அறிக்கை

எங்கள் அபிப்பிராயத்தின்படி, இந்நிறுவனம் சட்டப்படி வைத்திருக்க வேண்டிய கணக்கியல் மற்றும் மற்றப் பதிவேடுகள் அனைத்தும் சட்ட விதிகளின்படி முறையாக வைத்திருக்கப்பட்டிருக்கின்றன.

PricewaterhouseCoopers LLP
பொதுக் கணக்காளர்கள் மற்றும் பட்டயக் கணக்காளர்கள்

சிங்கப்பூர், 9 பிப்ரவரி 2023

ஆண்டறிக்கையும் கணக்குகளும்

கணக்குகளின் குறிப்புகள் தணிக்கையான நிதி அறிக்கைகளின் முக்கிய பகுதியாகும். அறிக்கைகளையும் வங்கியின் பலாபலன்களையும் வங்கியின் தணிக்கையான நிதி அறிக்கைகளின் முழுத் தொகுப்பையும் பார்க்காமல் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது. கணக்குகளின் குறிப்புகளை எங்கள் சிங்கப்பூர்க் கிளையில் கேட்டுப் பெறலாம்.

HSBC

Issued by HSBC Bank (Singapore) Limited (Company Registration No. 201420624K).